**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE THIRUVIDAIMARUTHUR**

| | |
|---|---|
| Calender : | |
| Miscellaneous : | |
| Preliminary Register : CC 953/2019 | |
| Sessions : | |
| Deposition of Witness for : LW-1/PW-1 | Village: ஆடுதுறை |
| Name : முருகானந்தம் | Age :59 |
| Father's/Husband's Name : சுவாமிநாதன் | Taluk : திருவிடைமருதூர் |
| Nationality : Indian | Religion : |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 11.03.2026**

**எதிரி ஆஜர்.**

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>:**

நான் முதன் முதலில் 15.12.2021ம் தேதி நீதிமன்றத்தில் விசாரணை செய்தபோது எதிரி இந்த வழக்கு குற்ற சம்பவத்தில் ஈடுபடவில்லை என்று கடிதம் எழுதி கொடுத்துவிட்டு சென்றுவிட்டார் என்று நான் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரிதான். ஒப்புதல் வாக்குமூலம் என்ன என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். நான் கையொப்பம் செய்து பதிவு செய்துள்ள ஒப்புதல் வாக்குமூலத்தில் கையொப்பம் மட்டும் அசாஆ 4 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். 15.12.2021 சாட்சியத்தில் நான் சொல்லியுள்ள கடிதம்தான் இந்த அசாஆ 4 ஆவணம் என்றால் சரிதான். அசாஆ 4 ஆவணத்தில் எதிரி சொல்லியுள்ள சங்கதிகள் உண்மைதான் என்றால் சரிதான். H நமூனா அசாஆ 5 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் என்னுடைய

கையெழுத்து இல்லை என்றால் சரிதான். வனசரகருக்கு ஜான்சன் கென்னடி என்பவர் கொடுத்த அறிக்கை ஏற்கனவே அசாஆ 6 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி அசாஆ 6 ஆவணத்தில் ஜான்சன் கென்னடி அவர்கள் இந்த வழக்கில் இறந்த 2 மயில்களையும் மருத்துவ பரிசோதனைக்காக 10.03.2018 ம் தேதி மருத்துமனைக்கு எடுத்து சென்று மாலை நேரம் ஆகிவிட்டதால் மருத்துவர் மறுநாள் எடுத்துவர அறிவுறுத்தியதின் அடிப்படையில் 11.03.2018 ம் தேதி மருத்துமனையில் இறந்த 2 மயில்களையும் மருத்துவரிடம் ஒப்படைத்ததாக குறிப்பிட்டு வனசரகருக்கு கடிதம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். வனசரகர் பதவி நான் வகிக்கவில்லை என்றால் சரிதான். வழக்கு சமயத்தில் வனசரகரா யார் பணிபுரிந்தார் என்ற விவரம் எனக்கு தெரியாது. சாட்சி பின்னிட் சரவணன் என்பவர் பணிபுரிந்ததாக சாட்சியம் அளித்தார். அசாஆ 7 கிராம நிர்வாக அலுவலர் வழங்கிய சான்றிதழில் நெல் வயலில் 2 மயில்கள் இறந்து கிடப்பதாகவும் மேற்படி மயில்களை வனத்துறையினரால் உடற்கூராய்விற்கு எடுத்து செல்லப்பட்டதாக மட்டுமே சான்று வழங்கியுள்ளார் என்றால் சரிதான். இந்த வழக்கில் 15.12.2021 லும் சரி 13.10.2023 லும் பொய்யாக எதிரிக்கு எதிராக சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல.

என் முன்னால் எதிரியின் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

Sd/- P. Rangeswari,

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**

**திருவிடைமருதூர். (FAC)**